குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஓசூர்

(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)

சி.சி. எண். 202–2022

அ.சா. 1

| | | |
|---|---|---|
| பெயர் | : | திருமதி. சரோஜா |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | திரு. கோவிந்தராஜ் |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| தொழில் | : | |
| வயது | : | 37 |
| The Hon'ble Supreme Court by *virtue* of General Order in Transfer Petition (CIVIL) No.1957 oF 2023, has ordered the subordinate Courts to stop the practice of mentioning the caste or religion of litigants in case papers. In compliance, such information of the Witnesses has neither been obtained nor mentioned in the deposition. | | |

**1873–ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. 15.05.2026**

**(எதிரி ஆஜர்)**

**<u>முதல் விசாரணை தொடர்ச்சி:</u>**

நான் சம்பவத்தை பதிவு செய்ததாக சொன்னதற்கான ஆவணங்கள் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியாது. நானும் எதிரியும் தற்போது சமாதானம் ஆகிவிட்டோம். என்னிடம் காட்டப்படும் சமாதான மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் அந்த கையெழுத்தை நான் யாருடைய வற்புறுத்தலும் இன்றி என்னுடைய விருப்பத்தின் பேரில் நானே

கையெழுத்து செய்தேன். **சமரச மனுவில் உள்ள அ.சா.1 ன் கையெழுத்து அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கை பற்றி வேறு எதுவும் சொல்ல விரும்பவில்லை. என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். அதில் உள்ள விவரங்களை போலிசார் சொல்ல நான் எழுதினேன். வேறு எதுவும் தெரியாது. புகார் மனுவில் உள்ள அ.சா.1 ன் கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**சாட்சி சட்டப்படி 161 குவிமுச பிரிவின் கீழ் அளித்த வாக்குமூலத்திற்கு பகுதியாக எதிர் சாட்சியம் அளித்த காரணத்தினால் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க சாட்சியை பகுதிபிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.**

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

நான் ஏற்கனவே 05.12.2023ம் தேதி முதல் விசாரணையில் சொல்லிய விவரங்கள் தான் உண்மையானது என்றாலும் தற்போது எதிரி உடன் சமாதானமாகி எதிரி காப்பாற்ற வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. கடந்த 04.11.2018ம் தேதி பகல் 3 மணிக்கு சூளகிரியில் உள்ள சரவண ஜவுளி கடையில் நான் புடவையை திருடியதாக நினைத்து ஆஜர் எதிரி என்னை கெட்ட வார்த்தையால் திட்டி கண்ணத்தில் அறைந்து நான் பெண்னென்றும் பாராமல் கொலை மிரட்டல் விடுத்தார் என்று புகார் மனுவிலும் போலிசார் விசாரணையிலும் சொல்லிவிட்டு தற்போது எதிரி உடன் சமாதானமாகி எதிரி காப்பாற்ற வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**<u>எதிரி தர்ப்பில் குறுக்கு விசாரணை :-</u>**

புகார் மனுவில் உள்ள விவரங்களை போலிசார் சொன்னதின் படி நான் எழுதினேன் என்றால் சரிதான். நான் கடந்த 05.12.2023ம் தேதி முதல்

விசாரணையில் சொல்லிய விவரங்களையும் போலிசார் சொல்லி கொடுத்ததின் பேரில் சொன்னேன் என்றால் சரிதான். புகார் மனுவில் முதல் தகவல் அறிக்கையிலும் சொல்லி உள்ளவாறு எந்த சம்பவமும் நடைப்பெறவில்ல என்றால் சரிதான். எதிரி மீது எந்த நடவடிக்கையும் எடுக்க தேவைவில்லை என்றால் சரிதான். எதிரிக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரிதான்.

**மறு விசாரணை இல்லை.**

**சாட்சி கூறியதனை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு சரியென ஒப்புக்கொண்டார்.**

**(ஓம். /—ஆர். நரசிம்மமூர்த்தி,)**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஓசூர்.**

(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)

சி.சி. எண். 202-2022

அ.சா. 2

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. கோவிந்தராஜ் |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | திரு. திம்மராயப்பா |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| தொழில் | : | |
| வயது | : | 42 |
| The Hon'ble Supreme Court by *virtue* of General Order in Transfer Petition (CIVIL) No.1957 oF 2023, has ordered the subordinate Courts to stop the practice of mentioning the caste or religion of litigants in case papers. In compliance, such information of the Witnesses has neither been obtained nor mentioned in the deposition. | | |

**1873-ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. 15.05.2026**

**(எதிரி ஆஜர்)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் அட்டக்குறிக்கி கிராமத்தில் குடியிருந்து தனியார் நிறுவனத்தில் வேலை பார்க்கிறேன். அ.சா.1 என்னுடைய மனைவி ஆவார். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. வழக்கு பற்றி எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை

**சாட்சி சட்டப்படி 161 குவிமுச பிரிவின் கீழ் அளித்த வாக்குமூலத்திற்கு எதிராக சாட்சியம் அளித்த காரணத்தினால் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர்**

**வேண்டுக்கோளுக்கிணங்க சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.**

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

கடந்த 04.11.2018ம் தேதி பகல் 3 மணிக்கு சூளகிரியில் உள்ள சரவண ஜவுளி கடையில் என்னுடைய மனைவியான அ.சா.1 புடவையை திருடியதாக நினைத்து ஆஜர் எதிரி அவரை கெட்ட வார்த்தையால் திட்டி கன்னத்தில் அறைந்து அ.சா.1யை பெண்னென்றும் பாராமல் கொலை மிரட்டல் விடுத்தாக என் மனைவி சொல்ல நான் தெரிந்துக்கொண்டேன் என்று போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரி உடன் சமாதானமாகி எதிரி காப்பாற்ற வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**<u>எதிரி தர்ப்பில் குறுக்கு விசாரணை :– இல்லை.</u>**

**<u>மறு விசாரணை இல்லை.</u>**

**சாட்சி கூறியதனை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு சரியென ஒப்புக்கொண்டார்.**

**(ஓம். /–ஆர். நரசிம்மமூர்த்தி,)**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஒசூர்.**

சி.சி. எண். 202–2022

அ.சா. 3

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. குமார் ( SSI of police Shoolagiri PS) |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | திரு.காட்டுரான் |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| வயது | : | 47 |
| The Hon'ble Supreme Court by *virtue* of General Order in Transfer Petition (CIVIL) No.1957 oF 2023, has ordered the subordinate Courts to stop the practice of mentioning the caste or religion of litigants in case papers. In compliance, such information of the Witnesses has neither been obtained nor mentioned in the deposition. | | |

**1873–ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. 15.05.2026 (எதிரி ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் தற்போது சூளகிரி காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிப்புரிந்து வருகிறேன். சூளகிரி காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட குற்ற எண் 480/2018 வழக்கு CC.No. 202/2022 ஆக நிலுவையில் இருந்து வரும் விவரம் எனக்கு தெரியும் வழக்கின் புலன் விசாரணை அதிகாரி காவல் உதவி ஆய்வாளர் S.M.குமார் என்பவருடன் நான் பணிப்புரிந்துள்ளதால் அவருடைய கையெழுத்து எனக்கு நன்கு அறிமுகம் ஆகும். எனவே, இவ்வழக்கில் நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 07.11.2018ம் தேதி சூளகிரி காவல்

நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளர் முத்துக்குமார் நிலையப்பொறுப்பில் இருந்த போது சரோஜா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகார் மனுவினை பெற்று நிலைய குற்ற எண் 480/2018 இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, 506(1) இதச, பிரிவு 4 பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். **புகார் மனு அ.சா.ஆ.3 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அதே நாள் காலை 14.30 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் வெங்கடராஜ் மற்றும் மோகன் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடம் பார்வையிட்டு மாதிரி வரைபடமும், பார்வை மகஜரும் தயார் செய்தார். **அந்த மாதிரி வரைப்படம் அ.சா.ஆ.5 ஆகவும், பார்வை மகஜர் அ.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** சாட்சிகள் சரோஜா, கோவிந்தராஜ், அருண் மற்றும் மகஜர் சாட்சிகளை விசாரித்து தனிதனியே வாக்குமூலம் பதிவு செய்தார். 07.11.2018ம் தேதி 17.00 மணிக்கு சரவண ஜவுளி கடை முன்பு எதிரியின் முன்பு அவரை கைது செய்து நிலையம் அழைத்து வந்து தக்க தக்கவழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினார். வழக்கின் கோப்பை தொடர்புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட காவல் உதவி ஆய்வாளர் குமார் முதல் கட்ட புலன்விசாரணை உறுதிப்படுத்தி இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

ஆவணங்களின் அடிப்படையில் தான் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். சம்பவம் 04.11.2018ம் தேதி நடைப்பெற்றதாகவும் அதற்கு 4 நாட்கள் கழித்து 07.11.2018ம் தேதி புகார் அளிக்கப்பட்டதாக வழக்கு கோப்பில் உள்ளது என்றால் சரிதான். 07.11.2018 தேதிலேயே எதிரி கொடுத்த

புகாரின் பேரில் அ.சா.1 யின் கணவர் அ.சா.2 யின் மீது எங்கள் காவல் நிலையத்தில் குற்ற எண் 481/2018 வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.1 எதிரியின் கடையில் இருந்து புடைவை வாங்கியதற்கான ரசீதை அ.சா.1 தாக்கல் செய்தார் என்றால் இல்லை.

முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகள் 294(b), 323, 506(1) இதச, பிரிவு 4 பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழான குற்றங்களுக்கு 3 ஆண்டுகளுக்குள் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட வேண்டும் என்றால் சரிதான். இந்த வழக்கில் கடந்த 10.08.2022ம் தேதி இறுதி அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். கொரான தொற்று காலம் என்பதால் இறுதி அறிக்கை கால தாமதாமாக தாக்கல் செய்யப்பட்டது. நாங்கள் தாக்கல் செய்துள்ள இறுதி அறிக்கையின் படி 03.02.2019ம் தேதி இறுதி அறிக்கை தயார் செய்யப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். 2019ம் ஆண்டு பிப்ரவரி இறுதி அறிக்கை தயார் செய்யப்பட்டுவிட்ட நிலையில் 3 ஆண்டுகள் கழித்து இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டதற்கான காரணம் இறுதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் கொரானா தொற்றால் நீதிமன்றங்கள் முடப்பட்டு இருந்த நிலையில் தாமதமாக இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிரி புகார்தாரரின் கணவர் மீது வேறு ஒரு புகார் கொடுத்தால் அதனை சமாதானம் செய்ய வேண்டும் என்பதற்காக புகார்தாரரின் மூலம் பொய்யான புகார் அளிக்கப்பட்டு எதிரி மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. **மறு விசாரணை இல்லை.**

**சாட்சி கூறியதனை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால்**

படிக்கப்பட்டு சரியென ஒப்புக்கொண்டார்.

(ஓம். /–ஆர். நரசிம்மமூர்த்தி,)
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஓசூர்.